**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.135/2021</u>**

2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 4 வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அறிவழகன் | வயது | 45 |
| த.பெ.(அ)க.பெ. | சக்தி | தொழில் | விவசாயம் |
| ஊர் | பைரவன்வட்டம் | சமயம் | |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் பைவரன் வட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை. எதிரி கோவிந்தராஜி ஊரின் பக்கம் வேலைக்கு சென்றிருந்த போது ஒரு கோவில் அருகே திருப்பத்தூர் மகளிர் காவல் நிலைய போலீஸார் மேற்படி கோவிந்தராஜி 2ம் திருமணம் செய்து கொண்டதாக கூறி அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது என்னை சாட்சியாக ஒரு கையெழுத்து போடச்சொன்னார்கள் நானும் கையெழுத்து போட்டேன். அப்போது என்னுடன் இளங்கோ என்பவரும் கையெழுத்து போட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் கையெழுத்து அன்றைய தினம் நான் போட்ட கையெழுத்து தான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

நான் கோமதிக்கு சித்தப்பா உறவுமுறை என்றால் இல்லை. எழுதாத 2, 3 தாளில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. சாட்சி கையெழுத்தாக கேட்டார்கள் போட்டேன். என்னை போலீஸார் பெயர்,ஊர் கேட்டார்கள் என்றால் சரிதான். கையெழுத்து போடச்சொன்னார்கள் என்றால் சரிதான். எதிரியை எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் போலீஸார் சொல்லிக்கொடுத்து கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கோமதி எனக்கு

அண்ணன் மகள் உறவு என்பதால் எனவே அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி= இல்லை